NALLA NILAMAGU NANBA

நல்ல நிலமாகு நண்பா

விதைகள்

VOL-1 ISSUE-9 DECEMBER 2020

" ஆதலால்,
பிள்ளைகள்
மாம்சத்தையும்
இரத்தத்தையும்
உடையவர்களாயிருக்க,
அவரும் அவர்களைப்போல
மாம்சத்தையும்
இரத்தத்தையும்
உடையவரானார்... "

எபிரெயர் 2: 14a

HAPPY Christmas

விதைகள்

Vol: 1 ● Issue: 9 ● டிசம்பர் 2020 ● Pages: 29

கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களோடு உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

2020-ம் ஆண்டை, வழக்கத்திற்கு மாறான ஆண்டாக நம் தலைமுறை சந்தித்திருக்கிறது என்பதில் எந்த சந்தேகமுமில்லை. இறைவனின் இரண்டாம் வருகைக்கு முன் அடையாளமாக Covid - 19 இருக்கிறது என்பதையும் நாம் மறுப்பதிற்கில்லை. இக்கடின சூழ்நிலையிலும் ஆண்டவர் நம்மை காத்திருக்கிறார் என்பதால் நன்றி சொல்லாமல் இருக்க முடியவில்லை. நாம் நீதிமான் என்பதால் அல்ல அவருடைய இரக்கத்தினால் பிழைத்திருக்கிறோம்.

வரப்போகும் புதிய ஆண்டிற்காய் கீழ்காணும் வசனங்களை அதிகமாய் தியானிப்போம்

லூக்கா 13:6-9, “அப்பொழுது அவர் ஒரு உவமையையும் சொன்னார்: ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான் அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங்காணவில்லை.” “அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன் ஒன்றையுங்காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.” “அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும் நான் இதைச் சுற்றிலுங்கொத்தி, எருப்போடுவேன்,” “கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்.”

ஆம், இன்னும் ஓர் ஆண்டை தேவன் கிருபையாய் தந்திருக்கிறார். 2021-ம் ஆண்டில் கனிகொடுப்பவர்களாய் மாறுவோம்.

-ஆமென்

Bro. S. மெர்லின்
ஆசிரியர்

NALLA NILAMAKU NANBA

16/76 Vettukattuvilai,
Kannanoor -629158,
Kanyakumari District, Tamilnadu, India
Phone +91 94869 54577

+91 86680 47378
/நல்ல-நிலமாகு-நண்பா-101820927950003

மலர்க்குழு உறுப்பினர்கள்

S. மெர்லின் (ஆசிரியர்)
K. S. பிரசன்னா மெர்லின் (மேலாண்மை)
J. ஜாண் டேனியேல்
S. ஜாக்குலின் ஷைன்
Dr. அரவிந்த் ஜெயக்குமார் ம.
R. ஹெலன் ஜெனிபா
J. ஜவஹர்
Design by: DANNIES DESIGNS

உள்ளடக்கம்

02 வார்த்தை மனுவானது

06 வாழ்த்து அட்டை எங்கிருந்து வந்தது?

07 ஸ்திரிகளுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள்!

10 நம்மவர் நம்மோடிருக்கிறார்!

11 கிறிஸ்மஸ் மரம்

12 இசை மீட்டுங்கள், இறைவன் பிறந்திருக்கிறார்

13 ஆடை அழகல்ல!

16 கிறிஸ்மஸ் தாத்தா

20 இரக்கம் மனிதனானது!

22 நற்செய்தி அறிவிக்கும் குடில்

23 இயேசு ஏன் வர வேண்டும்!

26 புலம் பெயர்ந்தவர்களோடு இயேசுவின் பிறப்பு

இயேசுவை "வார்த்தை" என்று ஏன் யோவான் பயன்படுத்துகிறார்

–ஓர் ஆழமான பார்வை

Rev'd. T. லிபின் ராஜ்
CSI கண்ணனூர், KK Diocese

கி.மு. 333 முதல் உலக சாம்ராஜ்யம் கிரேக்கர்களால் உருவாக்கப்பட்டது, இந்த நேரத்தில் பாலஸ்தீனமும் கிரேக்கர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. கிரேக்க அரசர்களில் புகழ்பெற்ற ஒருவர்தான் அலெக்ஸாண்டர் (Alexander the Great) இவருடைய காலத்தில் இவருடைய

ஆட்சியின் கீழுள்ள நாடுகளில் கிரேக்க மொழியை ஆட்சி மொழியாகவும், வழக்கு மொழியாகவும், வணிக மொழியாகவும் பயன்படுத்த ஆரம்பித்தனர். இதனால் கிரேக்க மொழி பிரபலமானது மட்டுமன்றி மற்ற மொழிகள் அழியும் அளவிற்கு கிரேக்க மொழியின் தாக்கம் அதிகமாய் இருந்தது. இதனால் தான் யூதர்கள் கூட எபிரேய மொழியை மறந்து கிரேக்க மொழியை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கி.மு 63-ல் இருந்து இந்த சாம்ராஜ்யம் ரோமர்கள் கைக்கு மாறியது. இவர்களுடைய காலத்திலும் கிரேக்க மொழியின் தாக்கத்தை மாற்ற முடியவில்லை. இயேசுகிறிஸ்து பிறந்த காலமும் ரோம ஆட்சிக்காலம் அகுஸ்து சீஷர் அப்போது பேரரசராக இருந்தார்.

இயேசுக் கிறிஸ்து கூட எபிரேய மொழி பேசாமல், அரமேயம் மற்றும் கிரேக்க மொழியில் பேசுவதற்கு கிரேக்க மொழியின் தாக்கமே காரணமாயிருந்தது. எபிரேய மொழியைப் பயன்படுத்தினால் எல்லா தரப்பட்ட மக்களிடமும் நற்செய்தியை சேர்க்க முடியாது என்பதை இயேசு தெளிவாய் அறிந்திருந்தார். இந்த கிரேக்க மொழியின் வளர்ச்சியே புதிய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்படாமல் கிரேக்க மொழியில் எழுதப்பட்டதன் காரணமாகும் (பழைய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்பட்டது).

யோவான் நற்செய்தி நூல் எழுதப்பட்ட காலம் கிபி 70 - 90. நான்கு நற்செய்தி நூல்களிலும் (மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்) யோவான் நற்செய்தி நூலே கடைசியாக எழுதப்பட்டது. இந்நற்செய்தி நூல் எழுதப்பட முக்கிய காரணம், திருச்சபையில் கிரேக்கர்கள், ரோமர்கள், மற்றும் புறஜாதிகள் இணைந்திருந்த இக்காலகட்டத்தில் இயேசுகிறிஸ்துவினுடைய தெய்வீகத் தன்மை குறித்து பலவிதமான குழப்பங்களும், கேள்விகளும் எழும்பின. அக்கேள்விகளுக்குப் பதில் தரக்கூடிய நூலாகத்தான் யோவான் நற்செய்தி நூல் எழுதப்பட்டது. "இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்திய ஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது."(யோவான் 20:31). இதுவே இதன் நோக்க வசனமாகும்.

மேலும் உலகின் மிகச் சிறந்த தத்துவ ஞானிகளான அரிஸ்டாட்டில், பிளாட்டோ, சாக்ரடீஸ், எப்பிக்கூரஸ், போன்றோர் கிரேக்கர்களாகத்தான் இருந்தார்கள்.

கிரேக்க சாம்ராஜ்ய காலத்தில் இவர்கள் தத்துவங்கள் உலகமெங்கும் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தியது. தத்துவங்களும் அவர்கள் பயன்படுத்திய வார்த்தைகளும் யூதர்கள் மத்தியிலும் பிரபலமானது. குறிப்பாக கிரேக்கத் தத்துவ ஞானிகளும் இறையியலாளர்களும் “Logos” என்ற பதத்தை அதிகமாகப் பயன்படுத்தினர். “Logos” என்பதற்கு தமிழில் “வார்த்தை” என்று பொருள். இதை, அதாவது Logos -ஐ கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையே உறவை ஏற்படுத்துகின்ற கடவுளுடைய வார்த்தை (God’s word) என்ற அர்த்தத்திற்காகப் பயன்படுத்தினார்கள். கடவுளுடைய வார்த்தை (God’s Logos) மிக முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக, மதிப்புள்ள, புனிதமிக்க ஒன்றாக அந்நாட்களில் காணப்பட்டது.

எனவே யோவான் ஆசிரியர், நீங்கள் முக்கியப்படுத்தும் வார்த்தைதான் (Logos) இயேசுகிறிஸ்து என்பதை நிரூபிக்கத் தன்னுடைய நற்செய்தி நூலில் இயேசு கிறிஸ்துவை வார்த்தை (Logos) என்று அறிமுகப்படுத்துகிறார். யோவான் 1:1-ல் (ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது). இயேசுதான் அந்த வார்த்தை என்பதையும், நீங்கள் இவரைத்தான் இதுவரை “Logos” என்று முக்கியப்படுத்தினீர்கள் என்பதை கிரேக்கர்கள் அவர்கள் வழியிலே எளிதாக அறிந்து கொள்ளவே இப்படி எழுதுகிறார்.

உண்மையில் “Logos” என்ற பதம் தனித்துவம் வாய்ந்தது. தமிழ் மொழி பெயர்ப்பில் இது “வார்த்தை” என்று மொழி பெயர்க்கப்பட்டு அதில் எந்த வித்தியாசத்தையும் காட்டவில்லை. ஆனால் ஆங்கிலத்தில் இது “word” என்று மொழி

பெயர்க்கப்பட்டு அதை முக்கியப்படுத்த முதல் எழுத்தை 'W' பெரிய எழுத்தாக எழுதியிருப்பார்கள், "In the beginning was the Word, and the Word was with God, and the Word was God." *(NRSV)* அவ்வளவு மதிப்புடையதாயிருந்தது இந்த "logos."

இரண்டாவதாகக் கருதப்படும் காரணம் என்னவெனில், யோவான் நற்செய்தி நூலின் ஆசிரியரான யோவான் இயேசுவின் மிக நெருக்கமான சீடன். எல்லா இடங்களிலும், எல்லா பணிகளிலும் மற்றும் எல்லா சூழ்நிலைகளிலும் இயேசுவோடு கூட பயணித்தவன் இந்த யோவான். இயேசுவின் வாழ்வு, பணி, மரணம், உயிர்த்தெழுதல் எல்லாவற்றையும் பார்க்கும் போது இயேசுவை கடவுளின் வார்த்தையின் பிரதிபலிப்பாகவே காண்கிறான். ஆகவே இயேசுவை வார்த்தை என்ற பதத்தின் வழியாக அறிமுகப்படுத்துகிறார். ஆதியிலே வார்த்தை இருந்தது என்று கூறி, இயேசு மரியாளின் உதிரத்தில் தோன்றும் முன்னேயும், உலக சிருஷ்டிப்புக்கு முன்பேயும் அவர் இருக்கிறவர் என்பதை தெளிவாக காண்பிக்கவே வார்த்தை (Logos) என்பதைப் பயன்படுத்தி யோவான் தனது நற்செய்தி நூலை ஆரம்பிக்கிறார். ஏனெனில் அக்காலத்தில் இயேசுவின் தெய்வீகத்தன்மைக் குறித்த மிகப் பெரிய விவாதம் இருந்தது குறிப்பிடத்தக்கது. அவ்விவாதங்களுக்கு யோவான் தன்னுடைய நற்செய்தி நூலால் முற்றுப்புள்ளி வைத்தார்.

தொடர்ந்த வசனங்களில் அவர் 100% கடவுளாயிருந்தார் அதே நேரத்தில் 100% மனுஷ குமாரனாயும் வெளிப்பட்டார் என்பதையும் நிரூபிக்க இந்த வார்த்தை மாம்சமானது (யோவான் 1:14ய.அந்த வார்த்தை மாம்சமாகி) என்று தெளிவாக எழுதுகிறார். இயேசுகிறிஸ்துவுக்கு இருக்கும் இந்த தனித்தன்மை (ரனைரந ிநசளழயெடவைல) வேறு யாருக்கும் உலகில் கிடையாது.

மரியாள் வழி பிறப்பு இயேசுவின் தொடக்கமல்ல, அவர் ஆதியிலே இருந்தவர். சிருஷ்டிப்புக்கு முன்னால் இருந்தவர், சிருஷ்டிப்பு இவர் மூலமாகத்தான் (வார்த்தையால்) நடந்தது, இயேசு இல்லாமல் அங்கு ஒன்றும் படைக்கப்படவில்லை, அவர் கடவுளோடு இருந்தார். கடவுளாக இருந்தார், கடவுளுடைய வார்த்தையாக இருந்தார் இந்தக் கடவுள்தான் இயேசு என்பதன் நிரூபணமே, யோவான் நற்செய்தி நூல்.

கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டை

(GREETING CARD)

ஜோஸ்லின் ஜெனிக்ஸ்
முஞ்சிறை

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த ஹென்றி என்ற தொழில் அதிபர் இந்த அட்டையை உருவாக்கிய பெருமை பெறுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் வசித்த இவர், கிறிஸ்துமஸ் சமயத்தில் உறவினர்களுக்குக் கடிதம் எழுத இயலாததால் அட்டையில் படத்தை அச்சிட்டு வாழ்த்தாக அனுப்பினர். ஆயிரம் பேருக்கு அவர் வாழ்த்து அட்டை அனுப்பினார்.

அதன்பிறகு கிறிஸ்துமஸ் சமயத்தில் வாழ்த்து அட்டைகள் அனுப்பும் பழக்கம் ஏற்பட்டது. ஹென்றி அனுப்பிய ஆயிரம் வாழ்த்து அட்டைகளை இப்போதும் ஒருவர் லண்டனில் தன் வசம் வைத்துள்ளார்.



மரியாள்... நீங்கள் அறியாத சில...

மெர்லின், கண்ணனூர்

1. தேவதூதன் மரியாளிடம் கிறிஸ்து உன்னில் பிறப்பார் என்று சொன்னபோது அவளின் வயதுசுமார் 14 முதல் 17 வரை இருந்திருக்கலாம்.

2. மரியாள் யூதவம்சத்தில் பிறந்தவர்.

3. இவள் கன்னிகை என்று, மத்தேயு, லூக்கா நற்செய்தி நூல் மாத்திரமல்ல, முஸ்லீம்களின் புனித நூலாகிய திருக்குர்ஆன்-ம் சான்று பகர்கிறது

4. இஸ்லாம் மதத்திலும் மரியாளை உயர்ந்த பெண்மணியாகவே திருக்குர்ஆன் சித்தரிக்கிறது. நற்செய்தி நூல்களைவிட திருக்குர் ஆன்-ல் அதிகமாக மரியாளைக் குறித்து எழுதப்பட்டிருக்கிறது

5. மரியாள் அரமேய மொழியோடு

கூட, லத்தீன், கிரேக்கம், எபிரேயம் போன்ற மொழிகளையும் அறிந்திருக்கலாம் என்கின்றனர் வரலாற்றறிஞர்கள்.

6. மரியாள் ஒரு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவரென்றும், அக்காலப் பெண்களின் பணிச்சூழலின்படி தினமும் 10 மணிநேரம் குடும்பத்திற்காக, சமையல் பணிகளுக்காக, துணிகள் துவைப்பதற்காக, விறகு பொறுக்குவதற்காக, கால்நடைகளுக்காக, தண்ணீர் எடுப்பதற்காக, உழைத்திருப்பார் என்கிறது வரலாற்று ஆய்வு

7. பரிசுத்த ஆவியின் மூலம் அவள் கர்ப்பமாக இருப்பதை அவள் அறிந்திருந்தாலும், பல அயலார்களும் அறிமுகமானவர்களும் சந்தேகத்திற்கு இடமின்றி அவள் வருங்காலக் கணவருடன் அல்லது வேறு ஒருவருடன் பாவத்தில் விழுந்ததாகக் கொடிய வதந்திகளைப் பரப்பினர்.

8. மரியாள் இயேசுவை ஏதோ ஒரு குகையில் அல்லது விலங்குகள் தங்கவைக்கப்பட்டிருக்கும் ஒரு இடத்தில் பெற்றிருக்கலாம். (முன்னணை என்பது இயேசு பிறந்த பிறகு கொண்டுபோய் கிடத்தின இடம், வேதத்தில் சொல்லப்பட்ட முன்னணை இயேசு பிறந்த இடம் என்று உறுதியாகச் சொல்ல முடியாது.)

9. மரியாள் தன்னுடைய 9 மாத கர்ப்ப காலத்தில் நாசரேத்திலிருந்து பெத்லகேமுக்கு யோசேப்போடு நடந்து சென்றாள், இது மலைப்பாதை, மிகக் கடினமானது, சாதாரண மக்கள் ஒருநாளில் 20 மைல் நடப்பார்களாம், மரியாள் கர்ப்பஸ்திரீயாக இருந்தபடியினால் 10 மைல்தான் நாள் ஒன்றிற்குப் பயணித்திருக்க முடியுமாம். சுமார் 10 நாட்கள் நடைப் பயணம் செய்துதான் பெத்லகேமை அடைந்திருக்க முடியும். எவ்வளவு வேதனை! (குறிப்பு: முற்காலங்களில் கடினமான பணி செய்து பழகாத ஒரு பெண்ணால் இவ்வளவு தூரத்தைக் கர்ப்ப காலத்தில் நடந்து கடக்க முடியாது என்கின்றனர். ஆய்வாளர்கள்.)

10. மரியாள் பயணம் செய்த நாசரேத் to பெத்லகேம் வழியில், சிங்கங்கள் மற்றும் கரடிகள் நிறைந்த வனப்பகுதியும் உண்டு, போகும் வழியில் பல ஆபத்துக்களைச் சந்தித்திருப்பார்கள். அதிலிருந்து தேவனே அவர்களைக் காத்திருப்பார்

11. இயேசுவின் ஊழியக் காலத்தில், மரியாள் கணவரை இழந்த ஒரு பெண்மணியாய் வாழ்ந்தாள், இது ஒரு பேரிழப்பு

12. ஒரு வரலாற்றாசிரியர், மரியாளின் பாடுகளைச் சரித்திரத்தில் பதிவு செய்யத் தவறி விட்டார்கள் என்று வேதனைப்படுகிறார்.

13. பொதுவாக ரோமன் கத்தோலிக்கத் திருச்சபை, புனிதர் என அழைப்பது, ஒரு நபரின் சந்நியாசம், தியாகம், குடும்பம் அல்லது உலக உடமைகளைக் கைவிடுதல் அல்லது வாழ்நாள் முழுவதும் ஏழைகளுக்காய் பணிசெய்ய அர்ப்பணித்தல் போன்றவற்றை உள்ளடக்கியது, ஆனால் மரியாளின் விஷயத்தில் அன்றாட வாழ்க்கையின் விசுவாசத்தை மையப்படுத்தியதாக இது அமைந்துள்ளது, அவள் தூதனிடம்..... இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். இந்த விசுவாசமே அவளது புனிதம்.

14. கத்தோலிக்கத் திருச்சபை மரியாள் பாவமே இல்லாதவர் என்கிறது, சீர்திருத்தத் திருச்சபைகள் இயேசுகிறிஸ்து மாத்திரமே உலகில் பாவமில்லாதவர் என்கிறது

15. மரியாள் தாவீதைப் போன்ற சிறந்த பாடலாச ரியர்- Mary Magnifica (லூக்கா 1.

16.இயேசுவின் பிறப்பு முதல் அவரின் இறப்புவரை மரியாள் அனுபவித்த பாடுகளின் அளவு அளவிட முடியாதது. உண்மையில் இயேசுவுக்கு தாயாகும் தகுதி மரியாளைவிட உலகில் வேறு யாருக்கும் இல்லை எனலாம்.

நம்மவர் நம்மோடிருக்கிறார்!

R. Helen Jenefa
Tirunelveli

பட்டாடையை விட கந்தையே அழகானது
இறைமகன் அணிந்ததால்.

முன்னணை முன் பஞ்சுமெத்தையும்
மதிப்பிழந்தது
இறைவனை சுமக்க தவறியதால்.

இசைக்கருவிகள் அல்ல ஆவின்மணியொலியே
இறைமைந்தனின் செவிகளில் இசையானது.

அரசர்கள் அல்ல சிறுமேய்ப்பர்களே
சிறப்பானவர்கள்
இறைவனைக் காண அழைக்கப்பட்டதினால்.

நம் மேன்மை தகுதியல்ல
இறைவன் நம்மோடு இருப்பதே - தகுதி

கிறிஸ்துமஸ் மரம்

(CHRISTMAS TREE)

ஜோஸ்லின் ஜெனிக்ஸ், முஞ்சிறை

கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் முதல் முதலாக மரத்தைப் பயன்படுத்தியது போலிப்பஸ் என்ற மாணவன். கி.பி 700 ல் தனது வறண்டு போன வாழ்வைப் பசுமையாக மாற்ற ஒரு இரட்சகர் பிறந்திருக்கிறார் என்பதின் அடையாளமாக பசுமையான மரங்களை தன் வீட்டில் வைத்து கிறிஸ்துமஸை கொண்டாடினார். இதுதான் 'CHRISTMAS TREE'-யோட பின்னணி.

அடுத்து நாம் பார்க்க இருப்பது கிறிஸ்துமஸ் மரத்தை யார் முதலில் அலங்கரித்தது என்று பார்ப்போம். கி.பி. 1500 ல் நடந்த கிறிஸ்துமஸ் நாட்களில் ஜெர்மனியை சார்ந்த மார்டின்லுத்தர் தனது வீட்டுக்கு நடந்து சென்றுகொண்டு இருந்தார். அப்போது கிறிஸ்துமஸ் மரத்தின் இடையில் தெரிந்த நட்சத்திரங்களை (Stars) ரசித்துக் கொண்டேசென்றார். வீட்டில் சென்றுதன் அனுபவத்தை அனைவரிடமும் கூறினார். தனது வீட்டில் கிறிஸ்துமஸ் மரம் இல்லாததால் பக்கத்து தெருவில் சென்று ஒருகிறிஸ்துமஸ் மரத்தை வெட்டி கொண்டுவந்தார். அதன் கிளைகளில் பல ஸ்டார்களை தொங்கவிட்டார். வெளிச்சமாக இருக்க அந்த ஸ்டார்களை சுற்றி மெழுகுவர்த்திகளைத் தொங்கவிட்டார். இதுதான் முதல் கிறிஸ்துமஸ் மர அலங்கரிப்பு. இது காலப்போக்கில் ஜெர்மனி முழுவதும் பரவியது. பின்னர்உலகம் முழுவதும் பரவியது.

HAPPY Christmas

MET MAT MUSIC SCHOOL



சிட்டுக் குருவியும் பச்சைக் கிளியும்

யோதா

(ஓர் ஓய்வு நாளின் காலை வேளையில் பூங்குன்று என்னும் இடத்தில் உள்ள ஆலயத்தின் நுழை வாயில் அருகேயுள்ள மா மரத்தில் மாம்பழம் உண்ண வந்த ஒரு சுறு சுறுப்பான சிட்டுக் குருவியும், ஓர் அழகிய பச்சைக் கிளியும் தங்களுக்குள் பேசுவதைக் கேட்போமா?)

சிட்டுக் குருவி: "அக்கா! அக்கா! கிளி அக்கா! அதோ பாருங்கள்! ஆலயத்துக்கு வருகிறவர்கள் எல்லாரும் எவ்வளவு அழகாக ஆடை உடுத்திக்கொண்டு வருகிறார்கள், பார்த்தீர்களா?"

பச்சைக் கிளி: "இதற்கே இவ்வளவு ஆச்சரியப்படுகிறாயே, இன்னும் சில நாட்கள் பொறு, கிறிஸ்துமஸ் வரட்டும், இவர்கள் எல்லாரும் எவ்வளவு விலை உயர்ந்த ஆடைகளை அணிந்துகொண்டு வரப்போகிறார்கள் பார்!"

சிட்டுக் குருவி: (துக்கத்துடன்) "நமக்குத்தான் ஒரு ஆடையும் கிடையாது. பிறந்த நாள் முதல் சாகும் வரை இப்படியே இருக்க

வேண்டியது தான். அக்கா! அக்கா! நாமும் இப்படி ஆடை தைத்துப் ப ாட்டால் நன்றாக இருக்கும் இல்லையா?”

பச்சைக் கிளி: “அட முட்டாள் குருவியே நமக்கு ஆடை அழகாகவே இருக்காது. நாம் இப்படியே இருப்பதுதான் நமக்கு அழகு. இப்படித்தான் ஆண்டவர் நம்மைப் படைத்திருக்கிறார்”

சிட்டுக் குருவி: “அப்படியானால் அவர்களுக்கு மட்டும் ஏன் ஆண்டவர் ஆடையைக் கொடுத்தார்?”

பச்சைக் கிளி: “அது ஒரு பெரிய கதை. ஆண்டவர் அவர்களைப் படைத்தபோது அவர்களுக்கும் ஆடை கிடையாது. நம்மைப் போல்தான் இருந்தார்கள்”

சிட்டுக் குருவி: “அய்யே! சின்னக் குழந்தைகளைப் போலவா?”

பச்சைக் கிளி: “ஆம்! கடவுள் படைத்தபோது அவர்களுக்குச் சிறு பிள்ளையைப் போன்ற களங்கமற்ற மனம் இருந்தது. எனவே ஆடை தேவைப்படவில்லை”

சிட்டுக் குருவி: “அப்படியானால் ஏன் பிறகு ஆடை அணிந்தார்கள்?”

பச்சைக் கிளி: “ஆண்டவர் அவர்களை உலகில் படைத்து,

ஏதேன் என்னும் தோட்டத்தில் வைத்தபோது, ஒரு மரத்தின் கனியை மாத்திரம் உண்ணக் கூடாது என்று சொல்லியிருந்தார். அதை உண்ணும் நாளில் நீங்கள் சாவீர்கள் என்றும் சொல்லியிருந்தார்"

சிட்டுக் குருவி: (ஆச்சரியத்துடன்) "பிறகு என்ன நடந்தது?"
பச்சைக் கிளி: "அவர்கள் விலக்கப்பட்ட அந்த மரத்தின் கனியை உண்டு பாவம் செய்தார்கள், உடனே அவர்களுக்குள் களங்கம், வெட்கம், பயம் எல்லாம் வந்தது. ஆண்டவரைப் பார்க்கப் பயந்து ஓடி ஒழிந்தார்கள். பின்னர் ஆண்டவர் இரக்கமுற்று அவர்களுக்கு ஆடை கொடுத்தார். அதனால்தான் இப்போது ஆடையோடு வாழ்கிறார்கள்"

சிட்டுக் குருவி: "அப்படியா? பாவம் செய்ததால்தான் ஆடை வந்ததா?"
பச்சைக் கிளி: "ஆமாம்! அவர்கள் அணிந்திருக்கின்ற இந்த அழகழகான ஆடைகள் எல்லாமே அவர்களது பாவத்திற்கான மூடல்கள்தாம்! வக்கிரம் நிறைந்த அவர்களது மனங்களின் அடையாளங்கள்தாம் இந்த ஆடைகள்!"

சிட்டுக் குருவி: "அப்படியா? ஆண்டவர் அவர்களுக்கு மட்டும் ஆடை கொடுத்து, நமக்குத் தராமல் விட்டுவிட்டார் என்றல்லவா நான் நினைத்தேன். சரி! எனக்கு இன்னும் ஒரு சந்தேகம். ஆண்டவர் சொன்னதை மீறி பழத்தை உண்டபோது ஆண்டவர் சொன்னது போல் ஏன் அவர்கள் சாகவில்லை?"
பச்சைக் கிளி: "சரியாகக் கேட்டாய்! இப்போது நீ பார்க்கிற மனிதர்கள் அனைவருமே, படைப்பின் போது கடவுள் கொடுத்திருந்த களங்கமற்ற பரிசுத்தச் சாயலுக்குச் செத்தவர்கள் தாம்"

சிட்டுக் குருவி: (சத்தமாகச் சிரித்தபடி) "ஓ! இவர்கள் சட்டை போட்ட செத்த மனிதர்கள் அப்படித்தானே?"
பச்சைக் கிளி: "இப்போது சொல் என் செல்லச் சிட்டே! உனக்கும் ஓர் ஆடை ஆண்டவரிடம் கேட்போமா?"

சிட்டுக் குருவி: "அக்கா! எனக்கு ஆடை வேண்டாம், வேண்டவே வேண்டாம்! நான் இப்படியே, ஆண்டவர் என்னைப் படைத்தது போலவே இருந்துவிட்டுப் போகிறேன்"

(என்று கூறித் தன் சின்னச் சிறகுகளைச் சிலுப்பிச் சிட்டாய்ப் பறந்து தூரத்தில் மறைந்தது அந்தச் சிட்டுக் குருவி)

கிறிஸ்மஸ் தாத்தா
(SANTA CLAUS)

கிறிஸ்மஸ் தாத்தா இல்லாமல் இன்று எங்கும் கிறிஸ்துமஸ் கொண்டாடப்படுவதில்லை என்ற அளவுக்கு கிறிஸ்மஸ் தாத்தாவும் கிறிஸ்துமஸ்சும் ஐக்கியப்பட்டுப் போனது. கிறிஸ்மஸ் தாத்தா தோன்றிய விதம் குறித்து அலசினால் அவருக்கும் ஒரு பின்னணி உண்டு என்பதை அறியலாம்! உண்மையில் புனித நிக்கோலஸ் தான் சாண்ட்டாகிளாஸ் (Santa Claus) என்ற கிறிஸ்மஸ் தாத்தா உருவாகக் காரணம் என்று சொல்ல வேண்டும்.

புனித நிக்கோலஸ் ரோமன் கத்தோலிக்க பிஷப் ஆவார்! நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். வாழ்க்கையின் அடித்தள மக்களின் மேம்பாட்டிற்காகவும், ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட அற்புதர் அவர்!

“உன் வலக்கரம் செய்தது இடதுகரம் அறியக்கூடாது” என்ற வேத வசனத்திற்கு ஒப்ப வாழ்ந்த அவர் மக்களின் தேவையறிந்து

Source:
https://ourjaffna.com/tradition

அதனை அவர்கள் அறியாமல் நிறைவேற்றி வந்தார். ஆலயத்தில் தங்கள் தனிப்பட்ட வேண்டுதல்களை, பாவசங்கீர்த்தனம் (பாவமன்னிப்பு) செய்யும்போது தங்கள் மனக் குறைகளைச் சொன்னால் அவர்களின் குறைகள் நீங்க விசேஷமாகப் பிரார்த்திக்கப்படும் என்று புனித நிக்கோலஸ் அறிவித்திருந்தார்.

அதன்படி மக்கள் ஒரு குறிப்பிட்ட நாளில் புனித நிக்கோலஸிடம் பாவமன்னிப்பு கோரிச் சென்ற போது தங்கள் குறைகளையும் சொல்லத் துவங்கினர். உண்மையிலேயே



அவர்கள் சொல்லும் குறைகள் நியாயமா னதுதானா? என்றறிந்து அவர்கள் அறியாமல் உதவிகள் செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இப்படி ஒரு சமயம் புனித நிக்கோலஸ் செய்யத் துவங்கிய உதவியே, அதுபோன்ற உதவிகள் அவர் தொடரக் காரணமானது! ஒரு மனிதர் தனது மகளின் திருமணத்திற்கு நகைகள் செய்யவோ, ஆடை ஆபரணங்கள் வாங்கவோ வழியின்றி மிகுந்த துயருக்கு ஆளாகி வேதனையுற்றிருந்தார். அந்த மனிதருக்கு மூன்று பெண் குழந்தைகள்! மூன்று பேரையும் எப்படிக் கரைசேர்ப்பேன் என்று தெரியாமல் புலம்பித் தவித்தார். குளிர்காலம் முடிந்ததும் வசந்த காலத்தில் மூத்த பெண்ணுக்குத் திருமணம் செய்வதென்று நிச்சயிக்கப்பட்டது. தனது இயலாமையை பாவசங்கீர்த்தனத்திற்குச் சென்றபோது அந்தமனிதரும் எல்லோரைப் போலவே தழுதழுத்த குரலில் சொல்லி அழுது மன்றாடி வந்தார்.

ஆனால் குளிர்காலவிழா எங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டுக் கொண்டிருந்த வேளையில் மூன்று பெண்களுக்குத் தந்தையான அவர் மனம் சோர்ந்துபோய் அவருடைய வீடும்

எந்தவிதமான மகிழ்ச்சியுமி-ன்றி சோகத்தில் மூழ்கிக் கிடந்தது. அந்தச் சோகத்திலேயே அந்த இரவு உறங்கியும் போனார்கள். நள்ளிரவு ஏதோ ஒரு பொருள் "பொத்" தென்றுவிழுந்த சத்தம் கேட்டு அந்த மனிதர் எழுந்து சென்றுபார்த்தார். வீட்டின் புகைபோக்கிக்கு நேர்கீழ் ஒரு பை கிடந்ததைக் கண்டார்.

அந்தப் பையைத் திறந்து பார்த்த அவருக்கோ பெருத்த ஆச்சரியம்! தன் மகள் திருமணத்திற்கு என்ன செய்வேன் என்று ஏங்கித் தவித்த மனிதனுக்கு விடையாகக் கிடைத்தது போல தங்க ஆபரணங்களும், பணமும் இருந்தது கண்டு திகைத்துப் போனார். "கொடுக்கின்ற தெய்வம் கூரையைப் பொத்துக் கொண்டு கொடுத்தது" என்றுசொல்வது போல தெய்வம் கொடுத்தது என்று சொல்லி மகிழ்ந்து மகளின் திருமணத்தை தடபுடலாக நடத்தினார்.

அதேபோல தனது இரண்டாவது மகளுக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்ட போதும் அவரைச் சோகத்தில் ஆழ்த்தியது. ஆனால் முதலில் தெய்வம் கொடுத்தது போல புகைபோக்கியை பொத்துக்கொண்டு இந்தமுறை கொடுக்கும் என்பது என்ன நிச்சயம்? ஆனால் அந்த அதிசயம் நிகழ்ந்தது! முன்பு புகைபோக்கி வழியே கிடைத்ததைப் போலவே இந்த முறையும் கிடைத்தது. விழுந்த சத்தம் கேட்டதும் வீட்டிற்கு வெளியே ஓடிச் சென்று பார்த்தார். தூரத்தில் யாரோ செல்வது மட்டும் தெரிந்தது. ஆனால் உருவம் யார் என்பதை அறிந்துகொள்ள முடியவில்லை.

மூன்றாம் மகள் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்த நிலையில் அந்த மனிதர் நள்ளிரவுவரை விழித்திருந்து புகைப்போக்கியையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தூங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தமக்கு உதவி செய்கின்ற அந்த உருவத்தைப் பார்க்க ஆவல் கொண்டிருந்ததால் அவ்வாறு நள்ளிரவுவரை விழித்திருந்து அந்த உருவ

த்தின் வரவுக்காக காத்திருக்க ஆரம்பித்தார். அவர் எதிர்பார்த்த அந்த நாளும் வந்தது. நள்ளிரவில் ஒருபை “பொத்” என்று விழுந்ததும் தயாராக திறந்து வைத்திருந்த கதவைத் தாண்டி வெளியே ஓடிப் பார்த்தபோது, சிவப்பு அங்கியணிந்திருந்த அந்த உருவம் வெள்ளைக் குதிரை யொன்றில் தாவி ஏறவும் இவர் அவரை யார் என்று பார்க்கவும் சரியாக இருந்திருக்கின்றது.

அவர் கண்கள் ஆச்சரியத்தால் நிறைந்து போயிருந்தது. அந்த உருவத்துக்குச் சொந்தக்காரர் புனித நிக்கோலஸ்! புனித நிக்கோலஸ் தான் உதவியது குறித்து யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு அந்தமனிதரை ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார். அந்த மனிதப் புனிதர் நிக்கோலஸ் வாழ்ந்த காலம் வரை தேவையுள்ளோர் யார் என்பதறிந்து அவர்கள் வீட்டின் புகை போக்கி வழியாக அவ்வீட்டார் அறியாமல் பொன்னோ பொருளோ போடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அவர் புகை போக்கி வழியாக பரிசுகளை, வெகுமதிகளை உள்ளே போட்டு விட்டு அந்த வீட்டிலுள்ளவர்கள் என்ன? யார் என்று கவனிப்பதற்குள் தனது வெள்ளைக் குதிரையில் பறந்து விடுவாராம். சிறுவர் சிறுமியருக்கு சிறுசிறு பரிசுப் பொருட்களையும் அவர்கள் வீடுகளுக்குச் சென்று போட்டுவிட்டு பின்னர் அவர்கள் அகம் மகிழ்வதைக் கண்டுமகிழ்ந்தார்!

வழக்கம் பழக்கமானது

அவர் மறைவுக்குப் பின் அவர் மேற்கொண்டிருந்த அப் பழக்கமே பின்னர் சாண்ட்டா கிளாஸ் என்ற உருவாகச் சித்தரிக்கப்பட்டு கிறிஸ்துமஸ் தினத்திற்கு முன்பு புகை போக்கி வழியாக குழந்தைகளுக்கு பரிசுகளை அளிக்கும் வழக்கம் பின்பற்றப்படலாயிற்று. குட்டையான தடித்தஉருவம், நீண்ட வெண்தாடி, சிவப்பு வெல்வெட் வண்ண உடையின் ஓரங்களில் வெண்பகுதி அலங்கரிக்க, சர்க்கஸ் கோமாளி போன்ற சிவப்பு வண்ணத்தில் குஞ்சம் வைத்த குல்லா, ஒரு மூக்குக் கண்ணாடி இடுப்பில் அகன்ற தோல் பட்டை பெல்ட், முதுகில் தொங்கும் பரிசுப் பொருட்கள் அடங்கிய ஒரு பெரிய பை. இதுதான் கிறிஸ்மஸ் தாத்தா! அதுமட்டுமா? கிறிஸ்மஸ் தாத்தாவுக்கு கடிதம் போட்டால் அவர் வாழ்த்து அனுப்புகின்றதிலிருந்து முக்கிய இடங்களுக்கு திடீர்விசிட் அடித்து குழந்தைகளை மகிழ்விக்கச் செய்வதுவரை உலகின் பலபகுதிகளில் கிறிஸ்மஸ் தாத்தா சாண்ட்டகிளாஸாக பவனி வந்துகொண்டிருக்கின்றார்.

இரக்கம், மனிதானானது

K. ஜஸ்டஸ்
சென்னை

எபிரேய மொழியில் “இரக்கம்” என்பதற்கு “ச்செசத்” (Chesedh) என்ற பதம் பயன்படுத்தப்படுகிறது. இந்தப் பதம், மொழிமாற்றம் செய்ய இயலாத அளவுக்குக் கருத்துச் செறிவு நிறைந்ததாய் காணப்படுகிறது. இது, ஒருவருக்காக பரிதாபப்படுவதை (Sympathize) மட்டும் குறிப்பதோ, துன்பத்தில் அகப்பட்டவருக்காக மனவருத்தம் கொள்வதையோ (to feel Sorry) குறிப்பது அல்ல. மாறாக, சம்பந்தப்பட்ட நபர்களின் உள்ளத்தில் சென்று, காரியங்களை அவர்களது கண்ணோட்டத்தில் பார்ப்பதையும் அவர்களது மனதின் எண்ணத்தின்படி அடிப்படையில் சிந்திப்பதையும், அவர்களது உணர்வுகளின் அடிப்படையில் உணர்வதையும் குறிப்பிடுவதாய் அமைந்துள்ளது. மேலும் இந்தப் பதம், தங்கள் தேவையில், தங்களால் ஒன்றும் செய்ய இயலாத நிலையில்

உள்ளவர்களுக்கு உதவி செய்வதைக் குறிப்பதாகவும் உள்ளது. உண்மையில், எந்தவிதத் தகுதியும் இல்லாதவர்களுக்கு காட்டப்படும் தயவுதான் இரக்கம் எனலாம்.

“ச்செசத்” (Chesedh) என்ற எபிரேய பதம், பிரச்சனைகளை வெளியிலிருந்து பார்த்து இரக்கம் பாராட்டாமல், பாதிக்கப்பட்ட நபர்களோடு அடையாளப்படுத்திக்கொண்டு அவர்கள் நிலையில் இருந்து பார்ப்பதையும், சிந்திப்பதையும், செயல்படுவதையும் குறிப்பதாய் உள்ளது. தேவன், தேவனாகவே இருந்து கொண்டு மனிதருடைய பிரச்சனைகளைப் பார்க்காமல், முழு மனிதனாக உருவெடுத்து இயேசுகிறிஸ்து என்ற பெயரில் இந்த உலகத்திற்கு வந்து பிரச்சனைகளை மனிதக் கண்களால் பார்த்தார். மனித எண்ணத்தின்படி சிந்தித்தார். மனித உணர்வுகளின்படி உணர்ந்தார்.

உண்மையில் “ச்செசத்” (Chesedh) என்ற இந்த எபிரேயப் பதம் தேவனுடைய மாறாத அன்பை வெளிப்படுத்துவதாய் உள்ளது. மனித வாழ்க்கையில் தேவன் பிரவேசித்ததால், மனிதனுடைய பிரச்சனைகள் அனைத்தையும் அவர் அறிந்தது மட்டுமல்ல அவைகளுக்குத் தீர்வளிக்கிறவருமாயிருக்கிறார்.

குடில் – நற்செய்தி அறிவிக்கட்டும

ஜோஸ்லின் ஜெனிக்ஸ்
முஞ்சிறை

குடில் அமைப்புக்கள் அனைத்தும் தற்போது வந்தவைகளே. முன்பு கிறிஸ்து பிறப்பை நாடகங்களாக நடித்துக் காட்டி வந்தனர்.

ஒவ்வொருவரும் தங்கள் கேரக்டர்களை தத்ரூபமாக நடித்துக் காட்டுவர். பிரான்சிஸ் அசிசியஸ் தான் உலகிலேயே முதல் முறையாக இவ்வாறு நாடகத்தை நடத்திக் காண்பித்தார். 1263 ஆம் ஆண்டு இத்தாலியில் கிரேஷ்யோ என்ற இடத்தில் தான் முதல் முறையாக நடத்தப்பட்டது. அதன் பிறகு இத்தாலியில் ஒரு குடிலைத் தயார் செய்தனர். இந்தக் குடில் தான் உலகிலேயே மிகப் பெரிய குடில் என்ற பெருமையைப் பெற்றது. 162 நாட்கள் திட்டமிட்டு, 80 விலங்குகளையும், 450 மனிதர்களையும் நடிக்க வைத்து இயேசுகிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார் பிரான்சிஸ் அசிசியர். இதைப் பார்த்த, கேட்ட அனைவரும் பரவசமடைந்தனர். அனேகர் கண்களில் கண்ணீருடன் இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள். இதன் தாக்கமே உலகம் முழுவதும் தங்கள் திருச்சபைகளிலும் வீடுகளிலும் கிறிஸ்மஸ் குடில்களை வைத்தனர்.

இதில் வருத்தமான காரியம் என்னவென்றால் நற்செய்தி அறிவிக்க பிரான்சிஸ் அசிசிஸ் கொண்டுவந்த குடில் செட்கள் இன்று நமது ஆடம்பரத்தைக் காட்டவும், வழிபாட்டுச் சிற்பமாகவும் இதை மாற்றிவிட்டோம் என்பதே.

வானகத்தும் வையகத்தும் அனைத்து அதி காரங்களும்
தன்னகத்தே நன்னிறைவாய்க் கொண்டவரே இயேசு தேவா!
பிறப்பும் இறப்புமிலாப் பரம்பொருளே இம்மண்ணில்
பிள்ளையாய்ப் பிறப்பெடுக்கத் தேவை என்ன எம் இறைவா?

வானகத்தும் வையகத்தும் அனைத்து அதி காரங்களும்
தன்னகத்தே நன்னிறைவாய்க் கொண்டவரே இயேசு தேவா!
பிறப்பும் இறப்புமிலாப் பரம்பொருளே இம்மண்ணில்
பிள்ளையாய்ப் பிறப்பெடுக்கத் தேவை என்ன எம் இறைவா?

பரலோகில் இருந்தபடி பாலித்தால் போதாதா?
பூலோகில் வந்திறங்கிப் பார்த்திடவும் வந்ததேனோ?
சத்திரத்தில் இடமின்றி முன்னணையிலே பிறந்து
தாய் மடியில் தவழ்ந்து விளை யாடிடவும் வந்ததேனோ?

உமைக் காணக் கண் திறவும்!

ஜாண் டேனியேல்
கொற்றியோடு

ஏனெடுத்தீர் இக்கோலம் இறையோனே இயேசு நாதா?
வானகமும் வையகமும் வார்த்தையினால் வார்த்தவரே
பிறப்பதற்கே இடமின்றிப் புல்லணைக்குப் போனதென்ன?
பிற்பட்ட மக்கள் படும் வேதனையை அறிவதற்கோ?

பாராளும் பேறுமக்கு உரிமைப் பேறாயிருக்க
பரலோகம் விட்டிறங்கி பார்மீது அவதரித்து
கன்னிமரி கரங்களிலே அடங்கியே இருந்ததென்ன?
ஏழைகளின் துயர் வாழ்வை நேர்கண்டு உணர்வதற்கோ?

அற்புதங்கள் அதிசயங்கள் செய்கின்ற வல்லமைகள்
அதிகமாய் இருந்தும் நீர், அலங்கார அரண்மனையைத்
தேடாமல், தேடி ஒரு ஏழை வீடு ஏறியதேன்?
அன்றாட வாழ்க்கை முறை அருகிருந்து காண்பதற்கோ?

உழைக்காமல் வாழுவதே உயர்வென்ற எண்ணமுள்ள
ஊதாரி மனிதர்கள் நிறைந்துவிட்டப் பொய்யுலகில்
உழைத்துப் பிழைக்கின்ற குடும்பத்தில் ஏன் பிறந்தீர்?
உழைப்போனின் உயர்வை இவ் வுலகிற்கு உணத்திடவோ?

சாமரம் வீசுதற்குத் தாதியர் அருகிலில்லை
தூபமும் ஏற்றி உம்மை வழிபடவும் எவருமில்லை
கோடிகளில் ஒருவர்போல் குடிசையிலே ஏன் வந்தீர்?
சேவகம் கொள்வதன்றி சேவகம் செய்வதற்கோ?

பொன் மலர்க் கைவீசி மென் மலர்க் காலுதைத்து
விண்மலர் மண்மீது பெத்தலைப் புல்லணையில்
பரலோகின் அழகே நீர் பிறந்தீரே எதற்காக?
நரராம் என் வினை தீர்க்க குருதியுடன் உயர்வதற்கோ?

பாவமிலாப் பிறப்பெடுத்த பரிசுத்தப் பிள்ளையே நீர்,
அறிவுச் செருக்கோடு அகந்தையான மனமுள்ள
ஆன்மீகத் தலைமையகம் எருசலையை
அணுகியதேன்?
அழுக்கான மனிதர்களால் அவமானம்
அடைவதற்கோ?

உம் முகத்தின் தரிசனத்தைக் காணுகின்ற பாக்கியத்தை
எம் முகமும் பெற்று அகம் மகிழுகின்ற நிலை காண
வானகத்து வல்லதந்தை தந்த ஒரே மைந்தராம் நீர்
மண் முகத்தில் கால் பதித்து நடந்திடவும் வந்துவிட்டீர்!

அன்பென்றால் என்னவென்றும் கடவுளென்றால் யாரென்றும்
பூவுலகம் அறிந்திடவே மேலுலகம் விட்டீரோ!
உண்மையின் உதயத்தை உலகமெலாம் கண்டுணர
உன்னதத்தின் உயிரொளியே உலகத்தில் உதித்தீரோ?

உமைக் காணக் கண் திறவும் எமையே
நாம் காணட்டும்!
உமதொளியை எனில் வீசும் அகமழிந்து
மாளட்டும்!
ஆவியரின் அருள் தாரும் புது மனிதம்
பிறக்கட்டும்!
ஆகாய மதில் வாரும் பரலோகில் பறக்கட்டும்!

COVID – 19/ புலம் பெயர்ந்தவர்களோடு பயணிக்கும் இயேசுவின் பிறப்பு

Dr. அரவிந்த் ஜெயக்குமார் ம.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை உலகமே கொண்டாட ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும் இவ்வேளையில், வழக்கமான கிறிஸ்துமஸ் -ஐ விட இவ்வாண்டு கிறிஸ்துமஸ் ஒரு நெருக்கடியான நிகழ்வாகவே காட்ச்சியளிக்கிறது. காரணம் Covid-19 என்னும் நோய்த்தொற்றால் முழு உலகமும் அசாதாரணமான சூழலை எதிர்கொண்டுள்ளது. அனைத்து தரப்பு மக்களையும் பாகுபாடு இல்லாமல் பாதித்தது, பாதித்துக் கொண்டிருக்கிறது. சமுதாயத்தில் ஓரங்கட்டப்பட்டவர்களையும் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களையும் துன்பத்தின் விழிம்பு நிலை வரை சென்று அது பாதித்தது. அதிலும் குறிப்பாக புலம் பெயர்ந்த தொழிலாளர்களின் நிலை மிகவும் பரிதாபகரமாகவே இருந்தது. இந்தியாவில் 10 கோடிக்கும் அதிகமான புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது, அவர்களில் பெரும்பாலோர் மிகவும் வளர்ந்த

மாநிலங்களுக்கு குடிபெயர்ந்த ஏழை மாநிலங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள். இந்த கிறிஸ்மஸ் காலத்தில் புலம்பெயர்ந்த மக்களின் பார்வையில் இயேசு கிறிஸ்து பிறப்பின் சம்பவத்தை இணைத்து ஆராய்வது சிறப்பானதாகும்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு நிகழ்வானது மரியாள் மற்றும் யோசேப்போடு இயேசுவும் ஒரு புலம்பெயர்ந்தவர் என்கிற ஆழ்ந்த அர்த்தத்தை மேற்கோள் காட்டுகிறது.

Covid-19 சூழலில் புலம்பெயர்ந்தவர்கள் எதிர்கொண்ட சவால்களை இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் நடந்த இரண்டு நிகழ்வுகள் பிரதிபலிக்கின்றது.

ஒன்று லூக்கா 2-ம் அதிகாரம் 1-7 முடிய வசனங்களில். அகுஸ்து ராயனின் கட்டளைப்படி யோசேப்பும் மரியாளும் நாசரேத்திலிருந்து பெத்லகேமிற்கு தங்கள் குடிமதிப்பை பதிவு செய்யும்படி சென்றனர். அவர்கள் பெத்லகேமிலிருக்கையில் மரியாளுக்கு
பிரசவகாலம்
ஏற்பட்டது,
அவள்
இயேசுவை
பெற்றெடுத்து,
"சத்திரத்திலே
அவர்களுக்கு
இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள்." இதிலிருந்து குழந்தை இயேசுவை பெற்றெடுக்க, மரியாள் மற்றும் யோசேப்பிற்கு எந்த ஒரு தங்குமிடமும் கிடைக்காமல் வரும் வழியில் எங்கோ பெற்றெடுத்த பின் சத்திரத்தில் இடம் தேடி வந்திருக்கிறார்கள். அங்கும் இடமில்லாதபடியால் முன்னணையில் படுக்க வைத்திருக்கிறார்கள் என்பது தெளிவாகிறது.இச்சம்பவம் Covid-19 தொற்றின்போது புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் எதிர்பாராத மற்றும்

துயரமான நிலையை நமக்கு வெளிச்சமிடுகிறது.

திருமதி: காந்தி பஞ்சாரி (Kanti Banjari), வயது 21. புலம்பெயருகின்ற தொழிலாளர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ஷிராமிக் சிறப்பு ரெயிலில் (a special train arranged for the migrant workers) சட்டீஸ்கருக்கு (Chhattisgarh) பயணம் செய்து கொண்டிருந்த போது பிரசவ வலிக்கு உள்ளானார். இடைநில்லா இரயில் நாக்பூருக்கு அருகிலுள்ள பாண்டுரானா நிலையத்தில் 55 நிமிடங்கள் நிறுத்தப்பட்டது. மருத்துவ பயிற்சியாளர்களின் (medical practitioners) உதவியுடன், அப்பெண் அந்த ரயில் பெட்டியில் குழந்தையை பெற்றெடுத்தாள். மே 11 துவங்கி 21, 2020 -க்குள் குறைந்தது 24 புலம்பெயர்ந்த கர்ப்பிணிப் பெண்கள், அவர்கள் வீட்டிற்கு செல்லும் வழியில் குழந்தையைப் பெற்றெடுத்திருக்கலாம்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்புச் சம்பவம் மற்றும் அவரது தாய் மரியாளின் நிலை, புலம்பெயர்ந்த பெண்கள் பலரின் பரிதாப நிலைமையை தெளிவாக பிரதிபலிக்கிறது.

இரண்டாவது நிகழ்வு, மத்தேயு 2-ம் அதிகாரம், 13 முதல் 15 வரையுள்ள வசனங்களில், யோசேப்பு இறைவனால் பின் வருமாறு அறிவுறுத்தப்பட்டான். "கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு: ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான." இந்த அறிவுறுத்தலைக் கேட்டப்பின், யோசேப்பு மரியாளையும் குழந்தை இயேசுவையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்குப் போனான். ஏரோது இறக்கும் வரை எகிப்தில் இருந்தனர்.

மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் உயிரை காக்கும் படிக்கு யோசேப்பு தன் குடும்பத்துடன் எகிப்திற்கு தப்பியோடி தஞ்சம் அடைத்தான். இந்த நிகழ்வு இயேசு கிறிஸ்துவும் ஒரு புலம்பெயர்ந்தவர் என்பதை வெளிப்படுத்துகிறது. முழுமனித வரலாறும் ஒரு வகை புலம்பெயர்ந்ததின் கதைதான். வேலைவாய்ப்பு, சிறந்த வாழ்வாதாரம், பாதுகாப்பு, போன்ற காரணங்களுக்காக, மக்கள் ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்கு குடிபெயர்கிறார்கள். மேலும் இன்றைய சூழலில் உள்நாட்டுப்போர், வன்முறை, அழிவு, மேலும் பல காரணங்களுக்காக அவர்களின் தாயகத்திலிருந்து மற்ற நாடுகளுக்கு இடம்பெயர்கின்றனர்.

புலம்பெயர்தல், பாடுகளும் வருத்தங்களும் நிறைந்தது. Covid-19

சூழலில் அரசாங்கம் நாடுதழுவிய ஊரடங்கு அறிவித்த உடனேயே ஏற்பட்ட எதிர்பாரா கிளர்ச்சியினால், நகரங்களிலுள்ள தொழிலாளர்கள் தப்பிக்க தங்கள் தங்கள் கிராமங்களுக்கு நூற்றுக்கணக்கான கிலோமீட்டர் தூரம் கால்நடையாக நடந்து சென்ற இதயத்தை உடைக்கும் புகைப்படங்களை நாம் கண்டிருக்கிறோம். இந்த தொழிலாளர்கள் உணவு, தங்குமிடம் மற்றும் பணமில்லாமல் தனித்து விடப்பட்டனர். இந்த புலம்பெயர்ந்தோர் குழு ஒன்று, ரயில் தடங்களில் நடந்து மத்திய பிரதேசத்தில் உள்ள தங்கள் கிராமங்களுக்கு சென்று கொண்டிருக்கும் போது, அசதியில் ரயில் தண்டவாளங்களில் தூங்கியதால், மகாராஷ்டிராவிலுள்ள ஆரங்கபாத்திற்கு சரக்குகளை ஏற்றிச்சென்ற ரயில் மோதியதால் சம்பவ இடத்தில் பலியாயினர். தர்பங்காவைச் சேர்ந்த ஒரு பெண் துணிச்சலுடன் காயமடைந்த தனது தந்தையை குருகிராமில் இருந்து தர்பங்கா வரை 1200 கி.மீ சைக்கிளில் ஓட்டிச்சென்ற மற்றொரு சம்பவம் வெளிச்சம் வீசுகிறது. மேகம் போன்ற சாட்சிகள் அனைத்தும் Covid-19 அபாயத்தில் தங்கள் உயிரைக் காக்க அபாயங்களை சந்தித்தவர்கள்.

இயேசுக்கிறிஸ்து செல்வாக்கு வாய்ந்த பெற்றோருக்கோ அல்லது அரண்மனையில் அரசனாகவோ பிறக்காத காரணத்தினால், இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பு சிறியதாக தோன்றலாம். அதின் நோக்கம் விளிம்பில் உள்ள மக்களுக்கு நம்பிக்கையை அளிக்க வேண்டும் என்பதாகும். Covid-19 சூழலில் சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, புலம் பெயர்ந்த மக்களுக்காக, விண்ணுலகை விட்டு மண்ணுலகிற்கு புலம்பெயர்ந்து வந்தவர். மண்ணுலகில் புலம்பெயர்தலை அனுபவித்தவர். நம்மோடு கூட இருக்கிறார் என்பதே இவ்வாண்டு கிறிஸ்மஸ் - ன் நற்செய்தி

நாங்கள் உங்களிடத்தில் எதிர்பார்ப்பது

நீங்கள் இந்த பத்திரிகையால் ஆசீர்வதிக்கப்பட்டால், தயவு செய்து உங்கள் கிறிஸ்தவ நண்பர்களோடு இதை பகிர்ந்து கொள்ளுங்கள்

உங்களால் முடிந்தால் இந்த பத்திரிகையை கறுப்பு வெள்ளையில் அச்சிட்டு electronics device இல்லாதவர்களுக்கு படிக்க கொடுத்து உதவுங்கள்

இந்த பத்திரிகையை வெளியிடும் நான் ஒரு இறையியில் கல்லூரி மாணவன், இறை மக்கள் சிலருடைய பண உதவியினாலே இந்த பத்திரிகையை வெளியிட முடிகிறது, என்னுடைய தரிசனம் இதை புத்தகமாக அச்சிட்டு மக்கள் கையில் கொடுக்க வேண்டுமென்பதே

எனவே நாங்கள் இந்த **E - Magazine** க்கும் ஒரு விலையை ரூ – 100 நிர்ணயிக்கின்றோம், இந்த பணத்தை கொண்டு அடுத்தகட்ட பணியை நிறைவேற்ற விழைகின்றோம், உற்சாகமிருந்தால் கொடுக்கலாம், கட்டாயமல்ல

நன்கொடை அழிக்க விரும்புபவர்கள் கீழ்கண்ட Bank account அல்லது Google pay வழியாகவும் அனுப்பலாம்

Bank Account Details:
S. Merlin
Acc. No.: 353701000000873
IFSC IOBA0003537
VERKILAMPI BRANCH

Google Pay ID:
+91 9486954577
merlin.kannanoor@oksbi

WISHING YOU A

MERRY

Christmas

AND

A PROSPEROUS HAPPY NEW YEAR

Edited and Published by S. Merlin,
16/76 Vettukattuvilai, Kannanoor -629158, Kanyakumari District, Tamilnadu, India